**செய்தி வெளியீடு எண்:52** **நாள்:23.01.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 22.1.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 12 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப, கருணை அடிப்படையில் உதவியாளர், பதிவறை எழுத்தர் மற்றும் ஓட்டுநர் ஆகிய பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயபாளையத்தில் அமைந்துள்ள கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலை ஈட்டிய நிகர இலாபத்தில் தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 2017–18ஆம் ஆண்டிற்கு 1 கோடியே 86 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மற்றும் 2018–19ஆம் ஆண்டிற்கு 53 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய், என மொத்தம் 2 கோடியே 39 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், தலைமைச் செயலாளர் திரு க.சண்முகம் இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம் இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., சர்க்கரை துறை ஆணையர் டாக்டர் இரா. ஆனந்தகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் தலைவர் திரு. அ.செ.அ. இராஜசேகர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் திரு. பால் பிரின்சி ராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**